சிவசிவ

# மலேசிய சைவ சமயப் பேரவை

## *நான்காம் ஆண்டு திருமுறைப் பெருவிழா 2018*

## *17 & 18 பிப்ரவரி 2018*

## *இடம்: விவேகானந்தா தமிழ்ப்பள்ளி, பெட்டாலிங் ஜெயா*




## திருமுறை ஓதும் போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிக்கான விதிமுறைகள்

## பொது விதிமுறைகள்

1. **திருமுறைப் போட்டியில் பங்கெடுத்தால் மட்டுமே இதர இரு போட்டிகளில் (ஓவியம் & பேச்சுப் போட்டி) பங்கெடுக்க இயலும்.**
2. போட்டியாளர்கள் தமிழ் மரபு சார்ந்த ஆடைகளையே அணிந்து வருதல் வேண்டும்.
3. நெற்றியில் நீறு அணிந்திருத்தல் வேண்டும்.
4. நடுவர்களின் முடிவே இறுதியானது; உறுதியானது. ஏதேனும் மறுப்பு தெரிவிப்பதாக இருப்பின் போட்டி ஒருங்கிணைப்பாளரை அணுகுதல் வேண்டும்.
5. விதிமுறைகள் இறுதி நேர மாற்றங்களுக்கு உட்பட்டது. மாற்றங்கள் இருப்பின் முன்னதாகப் போட்டியாளர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

## திருமுறை ஓதும் போட்டி

1. **போட்டி இரண்டு சுற்றுகளாக நடத்தப்படும். தேர்வுச் சுற்று மற்றும் இறுதிச் சுற்று.**
2. **தேர்வுச் சுற்றில் நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே இறுதிச் சுற்றில் கலந்து கொள்வர்.**
3. திருமுறை ஓதும் போட்டி ஆறு (6) பிரிவுகளில் நடத்தப்படும். அவை பின்வருமாறு:-
    - பிரிவு 1: வயது 5 முதல் 7 வரை
    - பிரிவு 2: வயது 8 முதல் 10 வரை
    - பிரிவு 3: வயது 11 முதல் 13 வரை
    - பிரிவு 4: வயது 14 முதல் 16 வரை
    - பிரிவு 5: வயது 17 முதல் 19 வரை
    - பிரிவு 6: வயது 20க்கு மேல்

1. போட்டியாளர்களின் பிறந்த ஆண்டு அடிப்படையில் வயது கணிக்கப்படும்.
    - பிரிவு 1: 1/1/2011 முதல் 31/12/2013 வரை பிறந்தவர்கள்
    - பிரிவு 2: 1/1/2008 முதல் 31/12/2010 வரை பிறந்தவர்கள்
    - பிரிவு 3: 1/1/2005 முதல் 31/12/2007 வரை பிறந்தவர்கள்
    - பிரிவு 4: 1/1/2002 முதல் 31/12/2004 வரை பிறந்தவர்கள்
    - பிரிவு 5: 1/1/1999 முதல் 31/12/2001 வரை பிறந்தவர்கள்
    - பிரிவு 6: 31/12/1998 கீழ் பிறந்தவர்கள்

2. போட்டியாளர் அவருக்குரிய பிரிவில் குலுக்கி எடுக்கப்படும் ஒரு பாடலை மட்டுமே பாடுதல் வேண்டும். தொடர்ந்து, அவர் பாடிய பாடலுக்குப் பொருள் விளக்கம் கூறுதல் வேண்டும். கூறப்படும் பொருள் விளக்கம் கொடுக்கப்பட்ட கையேட்டில் உள்ளவாறு இருத்தல் வேண்டும். போட்டியாளரின் சுய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. பாடப்படும் பாடல் உச்சரிப்புப் பிழை இன்றி குறுவட்டில் உள்ளபடியே பண்ணோடும் தாளத்தோடும் இருத்தல் வேண்டும்.
4. பாடலுக்கு முன்னும் பின்னும் ‘திருச்சிற்றம்பலம்’ என்று சொல்லுதல் வேண்டும்.

5. கையேட்டில் உள்ள பாடலுக்கும் ஒலி வட்டில் உள்ள பாடலுக்கும் ஏதேனும் வேறுபாடு கண்டால் ஒலி வட்டையே பின்பற்றுதல் வேண்டும்.

6. போட்டியாளர்கள் தாளம், சுருதி போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்த முடியாது.

7. குலுக்கி எடுக்கப்பட்ட பாடலைப் பாடிப் பொருள் கூறிய பின்னர், வேறு ஒரு புதிய பாடல் (குறுவட்டில் இல்லாத பாடல்) தமிழில் போட்டியாளருக்குக் கொடுக்கப்படும். (பிரிவு 1 தவிர). போட்டியாளர் அப்பாடலைப் பாடுதல் (பண் தெரிந்தால்) அல்லது உச்சரிப்புப் பிழையின்றி வாசித்தல் வேண்டும்.

8. போட்டியில் கலந்து கொண்ட அனைத்துப் போட்டியாளர்களுக்கும் சான்றிதழும் ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெற்ற மூவருக்குக் கேடயமும் நற்சான்றிதழும் வழங்கப்படும். இவ்வாண்டு தலைமை நடுவரால் சிறப்பாகப் பாடியதாகக் கருதப்படும் போட்டியாளருக்கு மட்டுமே சிறப்புப் பரிசாக ரொக்கம் வழங்கப்படும்.

9. மதிப்பிடும் முறை:

<u>பிரிவு 1</u>

| | |
|---|---|
| **பண்** | 35 **புள்ளிகள்** |
| **பொருள் விளக்கம்** | **20 புள்ளிகள்** |
| **உச்சரிப்பு** | **20 புள்ளிகள்** |
| **மனனம்** | **15 புள்ளிகள்** |
| **தோற்றம்** | **10 புள்ளிகள்** |
| **மொத்தம்** | 100 **புள்ளிகள்** |

**பிரிவு 2 முதல் 6 வரை**

| | |
|---|---|
| **பண்** | 30 **புள்ளிகள்** |
| **தாளம்** | 20 **புள்ளிகள்** |
| **உச்சரிப்பு** | **10 புள்ளிகள்** |
| **மனனம்** | **10 புள்ளிகள்** |
| **பொருள் விளக்கம்** | **5 புள்ளிகள்** |
| **தோற்றம்** | 5 **புள்ளிகள்** |
| **உச்சரிப்பு (2வது பாடல்)** | **20 புள்ளிகள்** |
| **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

10. போட்டிக்கான பாடல்களை வரிவடிவாகவும் ஒலி வடிவாகவும் **www.saivaperavai.org** என்னும் பேரவையின் அகப்பக்கத்தில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## பேச்சுப் போட்டி

1. பேச்சுப் போட்டி மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.
   பிரிவு 1 : 12 வயதிற்கு கீழ்
   பிரிவு 2 : 13 வயது முதல் 17 வயது வரை
   பிரிவு 3 : 18 வயதிற்கு மேல்

2. போட்டியாளர்கள் அனைவரும் மண்டபத்தில் அமர்ந்த பின் அனைவருக்கும் ஒரு பதிகம் (தமிழில்) வழங்கப்படும்.

3. போட்டியின் ஒருங்கிணைப்பாளர் அப்பதிகத்தினை முழுமையாக விளக்குவார். அச்சமயம் போட்டியாளர்கள் குறிப்புகள் எடுத்துக் கொள்ளலாம்.

4. பின், போட்டியாளர்களுக்கு ஏறத்தாழ 90 நிமிடங்கள் இடைவேளை வழங்கப்படும். அவ்வேளையில் போட்டியாளர்கள் அப்பதிகத்தின் பொருளினைக் கோர்வையாக 5 நிமிடங்கள் பேசுவதற்குத் தயார் செய்தல் வேண்டும். 90 நிமிடங்களுக்குப் பின்னர் போட்டி தொடங்கப்படும்.

5. போட்டியாளர்கள், பேசும் பொழுது சிறு குறிப்புகளைப் பயன்படுத்தலாம். ஆனால், கருத்துகளைக் கோர்வையாக எழுதி அதனைக் கட்டுரையாக வாசித்தல் கூடாது.

6. குறிப்புகள் இன்றிப் பேசும் போட்டியாளர்களுக்குச் சிறப்பு புள்ளிகள் வழங்கப்படும்.

7. கருத்து, உச்சரிப்பு, மொழிவளம், உணர்ச்சி, கருத்துக் கோர்வை போன்றவற்றினைப் போட்டியாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

8. போட்டி முடியும் வரை போட்டியாளர்கள் மண்டபத்திலிருந்து வெளியே செல்லுதல் கூடாது.

9. வெற்றி பெற்ற மூவருக்குக் கேடயம் மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்படும். போட்டியில் கலந்து கொண்ட ஏனையோருக்கு நற்சான்றிதழ் வழங்கப்படும்

10. மதிப்பிடும் முறை:

| | |
|---|---|
| **கருத்து** | **30 புள்ளிகள்** |
| **மொழிவளம்** | **20 புள்ளிகள்** |
| **உச்சரிப்பு** | **20 புள்ளிகள்** |
| **கருத்துக் கோர்வை** | **10 புள்ளிகள்** |
| **உணர்ச்சி** | **10 புள்ளிகள்** |
| **தோற்றம்** | **10 புள்ளிகள்** |
| **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

## ஓவியப் போட்டி

1. ஓவியப் போட்டி மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.
   பிரிவு 1 : 12 வயதிற்கு கீழ்
   பிரிவு 2 : 13 வயது முதல் 17 வயது வரை
   பிரிவு 3 : 18 வயதிற்கு மேல்

2. போட்டியாளர்கள் அனைவரும் மண்டபத்தில் அமர்ந்த பின் அனைவருக்கும் ஒரு பதிகம் (தமிழில்) வழங்கப்படும்.

3. போட்டியின் ஒருங்கிணைப்பாளர் அப்பதிகத்தினை முழுமையாக விளக்குவார்.

4. பதிகத்தின் பொருள் விளக்கம் கூறப்படும் போது, போட்டியாளர்கள் கூர்ந்து கேட்டுக் கொண்டு, பின் அப்பதிகத்தில் கூறப்பட்ட ஏதேனும் ஒரு காட்சியினை வரைதல் வேண்டும்.

5. போட்டியாளர்கள் ஓவியத்தினைக் கற்பனை செய்ய 30 நிமிடங்கள் நேரம் வழங்கப்படும்.

6. 30 நிமிடங்களுக்குப் பின்னர் போட்டியாளர்கள் ஓவியத்தினை வரைந்து வண்ணமிட இரண்டு (2) மணி நேரம் வழங்கப்படும்.

7. போட்டியாளர்கள் வரைந்து வண்ணமிடுவதற்குத் தேவையான வண்ணக் கலவைகளைத் தாமே கொண்டு வருதல் வேண்டும்.

8. போட்டியாளர்கள் பேரவை வழங்கும் ஓவியத் தாளில் மட்டுமே வரைய வேண்டும்.

9. வரையப்படும் ஓவியம் ஒரே காட்சியாக மட்டுமே இருத்தல் வேண்டும். பல காட்சிகளைக் கொண்ட ஒரு தொகுப்பாக வரைதல் கூடாது.

10. வெற்றி பெற்ற மூவருக்குக் கேடயம் மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்படும். போட்டியில் கலந்து கொண்ட ஏனையோருக்கு நற்சான்றிதழ் வழங்கப்படும்

11. மதிப்பிடும் முறை:

| | |
|---|---|
| **ஓவியத் திறன்** | **60 புள்ளிகள்** |
| **காட்சி உள்ளடக்கம்** | **40 புள்ளிகள்** |
| **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

**சிவசிவ**